# கேடயச்சுரப்பி நோய் உண்மையானது.

# அதன் உண்மைகளை அறியுங்கள்




மனித உடம்பு ஒழுங்காகச் செயற்படுவதற்குத் தேகத்தின் பல பாகங்களிலும் நீர் சுரக்கும் சுரப்பிகள் உண்டு. இவைகளிலொன்று கேடயச்சுரப்பி. ஆங்கிலத்தில் தைரொய்ட் (Thyroid) எனப்படும்.

இச்சுரப்பி குரல்வளைக்குக் கீழ் (Voicebox or Larynx) இருபக்கங்களிலும், சுவாசிக்கும் குழாயின் முன்பக்கத்தில் (Windpipe or Trachea) மெல்லிய தொடர்புடன் (Isthmus) அமைந்துள்ளது.

ஒரு பக்க சுரப்பி 4செ.மீ. நீளமும் 1-2செ.மீ. பருமனாகவும் 25கிராம் கனமாகவும் இருக்கும். உடம்பு சரியாக வேலை செய்வதற்கு இச் சுரப்பியின் தொழிற்பாடு அத்தியவாசியமானது. இச்சுரப்பி தைரோக்சீன் (Thyroxin) என்னும் ஹோமோனை உற்பத்தியாக்குகின்றது.

கனடாவில் இச்சுரப்பி நோய்களால் இருபதில் ஒருவர் பாதிக்கப்படுகின்றனர். இந்நோய்கள் 5-7 மடங்கு கூடுதலாக பெண்களில் காணப்படுகிறது.

**கேடயச்சுரப்பி நோய்களில் பலவகை உண்டு. கூடுதலாக ஏற்படும் சில நோய்களை ஆராய்வோம்.**

### இச் சுரப்பி நோய்களின் காரணிகள்:

கூடுதலாகக் கேடயச்சுரப்பி வேலை செய்யும்போது தைரொக்சீன் (Thyroxin) என்னும் ஹோமோன் கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகின்றது. இது ஹைப்பர் தைரோய்டிஸம் (Hyperthyroidism) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும்.

தைரொக்சீன் தேவையான அளவு உற்பத்தி இல்லை எனில், ஹைபோ தைரோய்டிஸம் (Hypothyroidism) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும்.

### ஹைபோதைரோய்டிஸம் (Hypothyroidism)

இந்நோய் சுகவீனமான நிலைக்கு இட்டுச் செல்லும்.

*இதன் அறிகுறிகள்:-*

- மெல்லிய, தளர்வான இருதயத் துடிப்பு
- சுறுசுறுப்பின்மை
- குறைவான மனவிருத்தியும் மறதிக் குணமும் (Slow mental process & poor memory)
- குளிரைச் சகிக்க முடியாமை
- தசைகளில் விறைப்புத் தன்மை
- வலிக்கும் விரல்கள்
- நிறை ஏற்றம்
- மலச்சிக்கல்
- தலை மயிர் வறட்சி அடைந்து உதிரவும் செய்யும்
- குரலில் ஆழமும் ஏற்படும்

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களில் கூடுதலாக சுறுசுறுப்பின்மை, மனச்சோர்வு, கவலைப்படல், அழுகை போன்ற அறிகுறிகள் தோன்றும்.

### ஹைப்பர்தைரோய்டிஸம் (Hyperthyroidism)

*இதன் அறிகுறிகள்:-*

- வேகமான இருதயத் துடிப்பு
- கைகளில் மென்மையான நடுப்புகள்
- தசை பலவீனம்
- கூடிய பசியிருந்தும் நிறையிழப்பு
- நித்திரையின்மை, படபடப்பு, சடுதியான குணமாற்றம் (Restlessness, Anxiety and Sleeplessness)
- கூடுதலாக வேர்த்தல், வெப்பத்தை சகிக்க முடியாமை
- அடிக்கடி மலப்போக்கு
- கேடயச் சுரப்பி விரிவடைந்து கழலையைக் (Goitre) காணலாம்.

இந் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் கூடுதலாக மனப்படபடப்பு உள்ளவர்களாகக் காணப்படுவார்கள்.

இவ் இரண்டு நோய்கள் உள்ளவர்களும் அவர் குடும்பத்தினரும் மேற் கூறிய அறிகுறிகளை விளங்கிக் கொள்வது அவசியம்.
இவ்வகையான தோற்றங்கள் இருப்பது சாதாரணம். ஆனால் இதற்கு சிகிச்சை பெறும்போது இவ் அறிகுறிகள் அற்றுபோய்விடும்.

மேற்குறிப்பிட்ட அறிகுறிகளில் மூன்றோ அல்லது கூடிய அறிகுறிகள் தென்படின் நீங்கள் உங்கள் வைத்தியரை நாடவேண்டும்.

இரத்தப் பரிசோதனை மூலம் சுலபமாக இனங்கண்டு நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

**இதற்கு வைத்தியம் வழக்கமாக தினம் ஒரு குளிகைக் கணக்கில் வாழ்நாள் முழுவதும் தொடரவேண்டிய சிகிச்சை என்று அறிந்திருப்பது மிக அவசியம்.**

பல மாதங்களுக்கோ பல வருடங்களுக்கோ பின் சிகிச்சை நிறுத்தப்பட்டால் தேகத்தின் உட் சுரப்பிகளின் செயற்பாடு குறைந்து திரும்பவும் நோய்க்கான அறிகுறிகள் தோன்றும்.
பல ஈழப் பெண்மணிகளின் மத்தியில் கேடயச்சுரப்பி நோய்கள் கூடுதலாக காணப்படுகிறது. அயடின் கலந்த உப்பு (Iodised Salt) பாவிப்பதன் மூலம் அயடின் குறைவினால் தோன்றக்கூடிய கழலையைத் தவிர்க்கலாம்.

Toronto Help-line
416-398-6184

---

**Translated with permission from the brochure "Thyroid disease is real - Know the facts" published by the Thyroid Foundation of Canada - Sivajini Jegatheeswaran R.N., The Wellesley Hospital**